بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *15/08/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**மக்கா வெற்றிக்குப் பிறகு அனுப்பப்பட்ட சில போர்ப்படைகளின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த ஜுமுஆவில் 3 பெரிய சிலைகள் இடித்தது பற்றி கூறியிருந்தேன். அதன் மேலும் விவரம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது: ஒன்று ஹஸ்ரத் சஅது பின் ஸைத் அஷ்ஹலீ (ரலி) அவர்களின் போர்ப்படை ஆகும். அதை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரீ 8 ஆம் ஆண்டு ரமலான் மாதம் 24 ஆம் நாள் ‘மனாத்’ சிலையைத் தகர்ப்பதற்காக அனுப்பினார்கள். அது செங்கடலின் கரையோரத்தில் ‘குதைத்’ என்ற இடத்திற்கு அருகில் ‘முஷல்லல்’ என்ற இடத்தில் நிறுவப்பட்டிருந்தது. இதனால்தான் இது ‘முஷல்லல் போர்ப்படை’ என்றும் அழைக்கப்படுகிறது. ஹஸ்ரத் சஅது பின் ஸைத் அஷ்ஹலீ (ரலி) அவர்கள் அங்கு சென்று சேர்ந்ததும், அங்கு அதனைப் பராமரிப்பவனும் ஒருவன் இருந்தான். அவன் ஹஸ்ரத் சஅது (ரலி) அவர்களிடம், ‘நீங்கள் என்ன விரும்புகிறீர்கள்?’ எனக் கேட்டான். அதற்கு அவர்கள் மனாத்தை இடிக்க விரும்புகிறேன் என்று கூறினார்கள். அதற்கு அவன் இந்த வேலையை செய்வது உங்களுக்கு சாத்தியமில்லாததாகும் என்றான். ஹஸ்ரத் சஅது (ரலி) அவர்கள் இந்த சிலையை நோக்கி முன்னேறினார்கள்.

அறிவிப்பாளர் கூறியுள்ளார். இது உண்மையோ, இல்லையோ! அல்லது சில வேளைகளில் நிறம் பூசுவதற்காக இவ்வாறு எடுத்துரைத்து விடுகிறார்கள். அதாவது, அப்பொழுது அங்கு தலைமுடிகள் கலைந்திருந்த நிலையில், ஆடைகள் இல்லாமல், கருப்பு நிற பெண் ஒருத்தி அறையிலிருந்து வெளியே வந்தாள். அந்தப் பராமரிப்பாளன் தனது சிலையிடம், மனாத்தே! உனது கோபத்தை இறக்கு’ என்று கூறினான். ஹஸ்ரத் சஅது பின் ஸைத் அஷ்ஹலீ (ரலி) அவர்கள் அந்தப் பரமரிப்பாளனைக் கொன்று விட்டார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இதற்கு இவ்வாறு விளக்கம் அளித்தார்கள்:* இந்தக் கொல்லப்பட்ட அறிவிப்பு சரியானது எனில், பராமரிப்பாளன் அன்னாருடன் மோத முயற்சிசெய்து, அந்த சண்டையில் கொல்லப்பட்டிருக்கலாம். அவன் தண்டனைக்காக வேண்டிக் கொண்டதனால் மட்டும் கொலை செய்தார்கள் என்பது இஸ்லாமிய போதனையே அல்ல; சரியானதாகவும் தெரியவில்லை. மாநபி (ஸல்) அவர்களின் பொதுவான வழிகாட்டல்களுக்கும் எதிரானதாகும்.

அடுத்து, நஃஹ்லாவை நோக்கி அனுப்பப்பட்ட ஹஸ்ரத் ஃஹாலித் பின் வலீத் (ரலி) அவர்களின் போர்ப்படை. இதை கண்ணியத்திற்குரிய நபி பெருமானார் (ஸல்) அவர்கள் ரமலான் 25 ஆம் நாள், ஹிஜ்ரீ 8 ஆம் ஆண்டு, அதாவது, கி.பி. 629 ஆம் ஆண்டு ஜனவரியில் குறைஷியர்களின் புகழ்பெற்ற சிலையான உஸ்ஸாவைத் தகர்ப்பதற்காக அனுப்பி வைத்தார்கள். இப்னு இஸ்ஹாக் (ரஹி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ஃஹாலித் (ரலி) அவர்களது வருகையை உஸ்ஸாவின் பராமரிப்பாளன் அறிந்ததும், அவன் சிலையின் மீது வாளைத் தொங்கவிட்டுவிட்டு, மலை மீது ஏறிக் கொண்டு, இவ்வாறு கவிதைக் கூறத் துவங்கினான்: உஸ்ஸாவே! எதுவும் எஞ்சிராத அளவுக்கு ஃஹாலிதின் மீது கடுமையான முறையில் தாக்குதல் நடத்து. போர்க்கவசத்தை அணிந்து தாக்குதலை துவங்கு. உஸ்ஸாவே! நீ இந்த மனிதன் ஃஹாலிதைக் கொல்லவில்லை என்றாலும், விரைவில் நிகழும் ஒரு பாவத்தை செய்தவராக அவரை ஆக்கிவிடு. அல்லது அவரிடம் இதற்காகப் பழிதீர்த்துக் கொள்.

ஹஸ்ரத் ஃஹாலித் (ரலி) அவர்கள் 'நஃஹ்லா' சென்றடைந்ததுமே கருவேல மரங்களை வெட்டினார்கள். உஸ்ஸா சிலை இருந்த வீட்டை இடித்தார்கள். பிறகு, மக்காவுக்குத் திரும்பி வந்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேலான பார்வைக்கு அறிக்கையை சமர்ப்பித்தார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள், "நீர் அங்கு ஏதேனும் குறிப்பான விஷயத்தைக் கண்டீரா?" எனக் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ஃஹாலித் (ரலி) அவர்கள் இல்லை என பதிலளித்தார்கள். அதற்கு மாநபி (ஸல்) அவர்கள், "பிறகு நீர் உஸ்ஸாவை அழித்து விடவில்லை. திரும்பிச் செல்வீராக. அதை வேரோடு சாய்த்து விட்டு வருவீராக" எனக் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஃஹாலித் (ரலி) அவர்கள் கட்டளையை செயல்படுவதற்காக உடனே திரும்பிச் சென்றார்கள். பராமரிப்பாளர்கள் மீண்டும் ஹஸ்ரத் ஃஹாலித் (ரலி) அவர்களைப் பார்த்ததும், மலை மீது ஏறிக் கொண்டனர். அப்பொழுது அவர்கள், 'உஸ்ஸாவே! இவர்களை அழித்துவிடு' என்று கூறிக்கொண்டிருந்தனர். இந்தக் கோயிலிலிருந்து தலைமுடி கலைந்த, கருப்பு நிற பெண் ஒருத்தி வெளியே வந்தாள். ஹஸ்ரத் ஃஹாலித் (ரலி) அவர்கள் அப்பொழுது இந்தக் கவிதையைக் கூறிக் கொண்டிருந்தார்கள்: 'உஸ்ஸாவே! நான் உன்னை நிராகரிக்கிறேன். உனது தூய்மையை எடுத்துரைக்கவில்லை. அல்லாஹ் உன்னை இழிவுபடுத்தியதை நான் பார்த்தேன்.' இதற்குப் பிறகு, அன்னார் (ரலி) திரும்பிவந்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் இந்த நிகழ்வை எடுத்துரைத்தார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள், "ஆம், இதுவே அந்த உஸ்ஸாவாகும். உங்கள் நகரங்களில் இப்பொழுது எவரும் அதை வணங்க மாட்டரென அது நம்பிக்கையிழந்து விட்டது." என்று கூறினார்கள்.

பிறகு, சுவா (سُواع) என்ற இடத்தை நோக்கி அனுப்பப்பட்ட ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் போர்ப்படை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் ஹிஜ்ரீ 8 ஆம் ஆண்டு ரமலானில் நிகழ்ந்தது. உஸ்ஸா சிலையைத் தகர்க்கும் பணி முடிந்ததுமே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத்

அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களை சுவா சிலையை வேரோடு அழிப்பதற்காக அனுப்பினார்கள். இந்த சிலையின் தோற்றம் ஒரு பெண்ணின் வடிவத்தில் இருந்தது. திருக்குர்ஆனில் சில சிலைகளைப் பற்றி பெயரை எடுத்து கூறப்பட்டுள்ளது. அதில் இந்த சிலையைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. சூரா நூஹில் இவ்வாறு வருகிறது:

وَقَالُوْا لَا تَذَرُنَّ اٰلِهَتَكُمْ وَلَا تَذَرُنَّ وَدًّا وَّلَا سُوَاعًا ۙ وَّلَا يَغُوْثَ وَيَعُوْقَ وَنَسْرًا ﴿٢٤﴾

பொருள்: மேலும், அவர்கள் நீங்கள் உங்கள் கடவுள்களை ஒருபோதும் விட்டுவிடாதீர்கள். (உங்கள் கடவுள்களான) வத், சுவா, யஹூஸ், யாகூக் மற்றும் நஸ்ர் ஆகியவற்றை விட்டுவிடாதீர்கள் என்று கூறினர்.

உண்மையில் இவையனைத்தும் ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்களின் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்த அந்த சில நல்ல மனிதர்களின் பெயர்களாகும். அவர்கள் இறந்ததும் ஷைத்தான், 'அவர்கள் அமர்ந்து வந்த அந்த இடங்களில் சிலைகளை நிறுவுங்கள். அவர்களின் பெயர்களை அவற்றிற்கு வைத்திடுங்கள்' என்று அவர்களது சமுதாயத்தின் உள்ளத்தில் போட்டான். எனவே அவர்கள் அவ்வாறே செய்தனர். மேலும், அவற்றை வழிபட்டு வந்தனர்.

ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் 'ரஹாத்' என்ற இடத்தில் சுவா சிலைக்கு அருகே சென்றடைந்ததும், அங்கு அவர்கள் அதன் பராமரிப்பாளனைக் கண்டார்கள். அம்ர் (ரலி) அவர்கள் அவனிடத்தில் தாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கிணங்க இந்த சிலையை உடைப்பதற்காக வந்துள்ளதாகக் கூறினார்கள். அதற்கு அவன் உங்களால் ஒருபோதும் இதனை உடைக்க முடியாது என்று பதிலளித்தான். அதற்கு அன்னார் காரணம் கேட்டதற்கு அவன், 'நீங்கள் எந்நிலையிலும் தடுக்கப்படுவீர்கள்' என்று பதிலளித்தான்.

அதற்கு அம்ர் (ரலி) அவர்கள், 'அந்தோ! உன் மீது வருத்தமே! இதனால் கேட்க முடியுமா, பார்க்க முடியுமா?' என்று கேட்டார்கள். பிறகு, அன்னார் முன்னே சென்று அதை உடைத்துவிட்டார்கள். மேலும், தம்முடன் இருந்தவர்களிடம், 'அத்துடன் கட்டப்பட்டிருந்த அந்தக் கோட்டையையும் தகர்த்து விடுங்கள்' எனக் கூறினார்கள். அவர்கள் அதை இடித்துத் தள்ளி விட்டார்கள். பிறகு அன்னார் அந்தப் பராமரிப்பாளனிடம், 'இப்பொழுது சொல்' என்று கேட்டதும், அவன் தான் வழிபட்ட சிலையின் நிலையைக் கண்டதும், உடனடியாக, 'நான் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுகிறேன்; மேலும், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கிறேன்' என்று கூறினான்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இதற்கு முன் ஒரு பராமரிப்பாளரையோ அல்லது யாரையோ கொன்றதாகக் கூறப்பட்டிருந்தது. அது எவ்வாறாயினும் ஐயத்திற்குரியது என்பதும் இந்தச் சான்றிலிருந்து உறுதியாகிறது.

பனு ஜஸீமாவை நோக்கி அனுப்பப்பட்ட ஹஸ்ரத் ஃஹாலித் பின் வலீத் (ரலி) அவர்களின் போர்ப்படை. இதுவும் ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு ஷவ்வால் மாதம் நிகழ்ந்தது. மக்கா வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் ஃஹாலித் பின் வலீத்

(ரலி) அவர்கள் உஸ்ஸா சிலையை தகர்த்துவிட்டு திரும்பி வந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களை பனு ஜஸீமாவை நோக்கி அனுப்பினார்கள். இது மக்காவின் யலம்லம் பக்கமாக குடி அமர்ந்திருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃஹாலித் (ரலி) அவர்களிடம், “இந்தக் கோத்திரத்திற்கு இஸ்லாத்தின்பால் அழைப்பு விடுங்கள்” என்று கூறினார்கள். மேலும், பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுடன் போர் புரிய வேண்டாம் என்றும் கூறியிருந்தார்கள்.

இப்னு சஅத் அவர்கள் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்: ஹஸ்ரத் ஃஹாலித் (ரலி) அவர்கள் இவர்களை சென்றடைந்ததும் அவர்கள் மக்களிடம், ‘நீங்கள் எந்த மார்க்கத்தில் இருக்கின்றீர்கள்?’ எனக் கேட்டார்கள். அதற்கு அவர்கள், ‘நாங்கள் முஸ்லிம்களாவோம்’ என பதிலளித்தார்கள். ஹஸ்ரத் ஃஹாலித் (ரலி) அவர்கள், ‘பிறகு நீங்கள் ஏன் ஆயுதத்தை ஏந்தி உள்ளீர்கள்?’ எனக் கேட்டார்கள். அதற்கு அவர்கள், ‘எங்களுக்கும், அரபு நாட்டின் ஒரு சமுதாயத்திற்கும் இடையே பகைமை இருந்து வருகிறது. அதே எதிரி சமுதாயம் வருகிறதோ என்ற அச்சம் எங்களுக்கு ஏற்பட்டது. எனவே, நாங்கள் ஆயுதத்தை ஏந்திக் கொண்டோம்’ என்று கூறினார்கள்.

எவ்வாறாயினும், ஹஸ்ரத் ஃஹாலித் (ரலி) அவர்கள், அவர்கள் தொடர்பாக நிம்மதி அடைந்திருக்கவில்லை என்பது அறிவிப்புகளில் இருந்து தெரிய வருகிறது. எனவே, அவர்கள் ஓர் இரவின் இறுதிப் பகுதியில் இந்தக் கைதிகளைக் கொல்வதே சரியானதாகத் தெரிகிறது என்று தீர்ப்பு வழங்கி விட்டார்கள். இதனால் முஸ்லிம்கள் சிலர் தங்களுடைய கைதிகளைக் கொன்று விட்டார்கள். ஆனால், பழைய முஸ்லிம்களாக இருந்த முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரிகளின் கூட்டத்தினர் ஹஸ்ரத் ஃஹாலித் (ரலி) அவர்களின் இந்தக் கருத்தோடு ஒருமித்துப் போகவில்லை. மேலும், தங்களுடைய கைதிகளைக் கொல்லவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த அனைத்து நிகழ்வுகள் குறித்து தெரிய வந்தபோது, பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பெருந்துயரம் ஏற்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள், “நான் ஃஹாலிதுக்கு அவர்களைக் கொல்லுமாறு கட்டளையிடவில்லை. நானோ அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுக்குமாறு மட்டுமே கூறியிருந்தேன்” என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடைய இரு கைகளையும் உயர்த்தி, இரண்டு முறை இறைவனிடத்தில் இவ்வாறு வேண்டினார்கள்: அல்லாஹ்வே! ஃஹாலித் செய்த செயலுக்கு நான் பொறுப்பில்லை என்பதை உன்னிடம் வெளிப்படுத்துகிறேன்.

பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை கொல்லப்பட்டவர்களுக்கான இழப்பீட்டுத்தொகையை வழங்குவதற்கும், அனைத்து விவகாரங்களையும் ஆய்வு செய்வதற்காகவும் அனுப்பினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அங்கு சென்று கொல்லப்பட்டவர்கள் அனைவரின் வாரிசுகளுக்கும் அதற்கான இழப்பீட்டுத்தொகையை வழங்கினார்கள். மேலும், அவர்களிடமிருந்து முஸ்லிம்கள் எடுத்திருந்த

அவர்களின் சொத்துக்கள் அனைத்தையும் அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்தார்கள். எதுவரை என்றால், நாய் தண்ணீர் அருந்தக்கூடிய மரத்தாலான பாத்திரத்தைக்கூடத் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். அனைவருக்கும் இழப்பீட்டு தொகை போன்றவற்றை வழங்கிய பிறகு, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் சிறிது செல்வம் மீதமாகி விட்டது. எனவே, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மீதமாகிய செல்வத்தையும் அந்த மக்களுக்கே கொடுத்து விட்டார்கள். மேலும், 'நான் இந்த செல்வத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சார்பாக எச்சரிக்கையாக வழங்கி விடுகின்றேன். இவ்வாறு, எந்த இழப்பு தொடர்பாக அல்லாஹ்வின் தூதரும் அறியாது இருக்கிறார்களோ, நீங்களும் அறியாது இருக்கிறீர்களோ அப்படிப்பட்ட இழப்பிற்கும் சேர்த்து இழப்பீடாக அமையும் விதத்தில் இது இருக்கட்டும்' என்று கூறினார்கள். இதனால் பெருமானார் (ஸல்) அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்கள். மேலும், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், 'நீர் முற்றிலும் சரியாக செய்துள்ளீர்! மிகவும் நல்லதாக செய்துள்ளீர்' என்று கூறினார்கள்.

இந்த நிகழ்வுக்கு முன்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு கனவும் கண்டிருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் அதுகுறித்து கூறுகிறார்கள்: "நான் ஹைஸ் (எனப்படும் பேரித்தம் பழம், பன்னீர் மற்றும் நெய் கலந்து செய்யப்படும் ஒரு) உணவின் ஒரு கவளத்தை உண்டேன். எனக்கு அதன் சுவை மிகவும் ருசியாகத் தெரிந்தது. ஆனால், நான் அதை விழுங்கியதும் அதன் சிறிது பகுதி எனது தொண்டையில் சிக்கிக் கொண்டது. பிறகு, அலீ கையை விட்டு அதை வெளியே எடுத்தார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த கனவிற்கு விளக்கம் அளித்தவாறு இவ்வாறு கூறினார்கள்: "யா ரஸூலல்லாஹ்! {(ஸல்)} இது தாங்கள் அனுப்பிய போர்ப்படைகளில் ஒரு போர்ப்படையாகும். அதைத் தாங்கள் அனுப்புவீர்கள். அவற்றில் சில தங்களுக்குப் பிடித்திருக்கும்; சில ஆட்சேபனைக்குரியவையாக இருக்கும். பிறகு தாங்கள் அலீயை அனுப்புவீர்கள். அவர்கள் இதில் எளிமையை ஏற்படுத்தி விடுவார்கள். அதாவது, விவகாரத்தை சரியாக்கி விடுவார்கள்." ஆக, இந்த போர்ப்படையின் நிகழ்வுகள் மூலம் இந்தக் கனவு நிறைவேறி விட்டது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* ஹஸ்ரத் சய்யித் ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் (ரஹி) அவர்களும் புகாரீக்கு விளக்கவுரை எழுதியுள்ளார்கள். அவர்கள் மேற்கொண்டு இந்த அறிவிப்பூர்வமான குறிப்பையும் எழுதியுள்ளார்கள்: ஒரு விஷயம் நன்கு தெளிவாகி விடுகிறது. அதாவது, ஹஸ்ரத் ஃஹாலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு எந்தத் தீய எண்ணமும் இருக்கவில்லை; அவர்கள் முயன்று செய்த செயலில் அவர்களிடம் ஒரு தவறு ஏற்பட்டுவிட்டது. இதனால்தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃஹாலித் (ரலி) அவர்கள் மீது கோபமும் அடைந்தார்கள். மேலும், இறைவன் முன்னிலையில் தமக்கும் அதற்கும் தொர்பில்லை என்பதையும் வெளிப்படுத்தினார்கள். மேலும், ஆய்வின் மூலமாக ஏதோ தப்பெண்ணத்தின் அடிப்படையில் இந்தக்

கொலைகள் நிகழ்ந்துள்ளன என்பதே நிரூபணமான பிறகே, பெருமானார் (ஸல்) அவர்கள் செயலுக்கு இணையான தண்டனை வழங்குவதற்கு பதிலாக இழப்பீடு வழங்கத் தீர்மானித்தார்கள். ஹஸ்ரத் ஃஹாலித் பின் வலீத் (ரலி) அவர்கள் வேண்டிக் கேட்டுக் கொண்டும், தம் பக்க காரணங்களை எடுத்து வைத்த பிறகு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃஹாலித் (ரலி) அவர்களை மன்னித்து விட்டது மட்டுமல்லாமல், அதற்கும் மேற்பட்டு, சில நாள்களுக்குப் பிறகே ஹுனைன் போருக்காக ஆயத்தம் செய்யப்பட்ட முன்னணிப் படை மற்றும் குதிரைப்படையின் கண்காணிப்பாளராகவும், தளபதியாகவும் ஹஸ்ரத் ஃஹாலித் அவர்களை நியமித்தார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இது போக இன்னும் இரண்டு போர்ப்படைகள் பற்றியும் சுருக்கமாக கூறப்பட்டுள்ளது. யலம்லம் போர்ப்படை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹிஷ்ஷாம் பின் ஆஸ் (ரலி) அவர்களின் தலைமையில், 200 பேரைக் கொண்ட இந்தப் போர்ப்படையை மக்காவின் தென்கிழக்கு பகுதியில் இருக்கும் யலம்லமை நோக்கி அனுப்பினார்கள். அடுத்து, உர்னா போர்ப்படை. இது அரஃபாத்துக்கு முன்னால் உள்ள ஒரு ஊராகும். கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃஹாலித் பின் சயீத் பின் ஆஸ் (ரலி) அவர்களை 300 பேரைக் கொண்ட மக்களுக்குத் தளபதியாக நியமித்து இதன் பக்கம் அனுப்பினார்கள் என்று எடுத்துரைக்கப்படுகிறது.

இந்தப் போர்ப்படை பற்றி முஹம்மத் பின் அம்ர் வாக்தீ அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதைத் தவிர வேறு எந்தப் புகழ்பெற்ற வாழ்க்கை வரலாற்று ஆசிரியரும் இதை எடுத்துரைக்கவில்லை. எனவே, இது சரியானதுதானா, இல்லையா என்பது கவனித்துப் பார்க்க வேண்டியதாகும். இதற்கான மேற்கொண்ட எந்த விவரமும் கிடைப்பதில்லை.

*இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* எவ்வாறாயினும், இதனால் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றியும் நன்றாகத் தெரிய வருகிறது. அதாவது, எங்குமே பெருமானார் (ஸல்) அவர்கள் கடுமை காட்டவில்லை. மேலும், போர்களில் பெருமானார் (ஸல்) அவர்கள் கொலைகளை செய்ய வைத்தார்கள் என்று இஸ்லாத்தின் எதிரிகள் சுமத்தும் இந்தப் பழியும் தவறானதாகும். எங்காவது தவறுதலாக ஏதேனும் நிகழ்ந்த போதிலும்கூட, பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்கள் மிகுந்த கோபத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

اَلْحَمْدُ لِلّٰہِ ! اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّا اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**